DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: STC.No.13/2019**

Deposition of witness for Prosecution அ.சா.6

Name : முத்துக்குமார்
Father/ Husband Name : சின்னையா
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 24.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது காவல் துறையில் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து நிறைவு செய்துள்ளேன். நான் கடந்த 16.07.2018-ம் தேதி தேவகோட்டை நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது எனது பார்வைக்கு வைத்த தேவகோட்டை நகர் காவல் நிலைய குற்ற எண்.117/2018 இதச பிரிவு 304 A வழக்கு கோப்பை பார்வையிட்டு வழக்கின் சம்பவ இடத்திற்கு 12.00-12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுப்பிரமணி, மருது முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் 12.30 மணிக்கு தேவகோட்டை அரசு மருத்துவமனை சென்று அங்கு பிணவரையிலுள்ள இறந்த பன்னீர்செல்வத்தின் உடலை சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **(மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இறந்த பன்னீர் செல்வத்தின் உடலை சடலகூறாய்வு செய்ய முதல்நிலைக்காவலர் 532 கர்ணன் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி சடலகூறாய்வு முடித்து இறந்த உடலை பன்னீர் செல்வத்தின்

உறவினரிடம் ஒப்படைத்தார். பின்னர் எதிரியை அன்றைய தினம் 12.00 மணிக்கு தேவகோட்டை சிவன் கோவில் அருகே வைத்து கைது செய்து பின்னர் காவல்நிலையம் கொண்டுவந்து உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி சமூகம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட விபத்து ஏற்படுத்திய வாகனமான டிராக்டர் TN 63 Y 4979 வாகனத்தையும், விபத்துக்குட்பட்ட TN 55 Z 2486 வாகனத்தையும் வேண்டுகோள் கடிதம் மூலம் வாகன தணிக்கை ஆய்வாளருக்கு அனுப்பி வாகன தணிக்கை ஆய்வாளரை விசாரித்து வாகன தணிக்கை சான்றிதழ் பெற்றேன். **(மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனமான டிராக்டர் TN 63 Y 4979 அ.சா.ஆ.7 மற்றும் விபத்துக்குட்பட்ட TN 55 Z 2486 வாகனம் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 24.08.2018-ம் தேதி சாட்சி ராதா, கர்ணன், சார்பு ஆய்வாளர் மருது, மருத்துவர் செந்தில் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **(மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. விபத்து இழப்பீடு பெறுவதற்காக புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை காவல் நிலையம் வரவைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.